# கவிதை

இளங்கவிஞர்களுக்கான
இருதிங்கள் ஏடு

ஆசிரியர்:
அ. யேசுராசா

## யாருக்கும் அச்சமின்றி மனசவிழ...

கருணாகரன்

பிரிவெழுதி பிரிவெழுதி
கைசலித்த பின்னும்
காதல் முகிழ்க்கிறது பெருகி
விழி வெடித்து
நுரைததும்ப நுரைததும்ப
இழை நீள்கிறது மனசில்
முகம் மறந்து முகம் மறந்து
போனதன் பின்னும்
போகவில்லை நினைவறுந்து
ரயிலோட
ராக்குருவி தனித்தழும்
இரவு நீள்கையில்
மனச்சுவர்கள் அதிர்கின்றன.
பெருகிப் பெருகி
நீளும் நினைவுகள்
காதலின் மனம் தடவுகின்றன.

உயிரழியும் புள்ளிக் கணத்திலும்
ஒரு தரம் இயல்பாய்
புன்னகைப்போமா,
விழிசேர்த்து ஒருவார்த்தை கதைப்போமா?-
யாருக்கும் அச்சமின்றி மனசவிழ......

ஆனி - ஆடி 1994

விலை: ரூபா 15/-

## உங்கள் தேவைகளை நிறைவு செய்திட விரைந்து வாருங்கள்!

வர்ணப் பூச்சு வகைகள்

வாகன உதிரிப்பாகங்கள்

இரும்புப் பொருள் வகைகள்

எரிபொருட்கள்

மற்றும் பல.........

# கலியுகவரதன் விற்பனை நிலையம்

நீராவியடி, யாழ்ப்பாணம்.

# கவிதை

இளங்கவிஞர்களுக்கான
இருதிங்கள் ஏடு

□ □

தேர் : 1
உலா : 2

ஆனி — ஆடி 1994

□ □



ஆசிரியர்:
அ. யேசுராசா

1, ஓடைக்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.


''இளமைக் குருதி
எதிர்காலத்தின் கனவைமூட்டும்;
விழித்த வாலிபம் நடைபோடுகுது!''
- ஸ்ரீ. ஸ்ரீ.

## தேவை : பரவலான செயற்பாடு!

தமிழகத்தின் பிரபல ஜனரஞ்சக எழுத்தாளரது நூல்களின் மாயையில்தான் இங்குள்ள வாசகரிற் பெரும்பாலோர் மூழ்கியுள்ளனர்.

அங்கும் இங்கு தமிழீழத்திலுமுள்ள நல்ல எழுத்தாளர்கள் - அவர்களின் படைப்புக்கள் - பற்றி இவர்கள் ஏதும் அறியர்.

வெறும் பொழுதுபோக்கு - ஜனரஞ்சக - எழுத்துக்களால் தமிழ்மொழிக்கோ இலக்கியத்துக்கோ எவ்வித பயனும் இல்லை.

பொது வாசகனின் ஜனரஞ்சக மாயையினைக் களைவதிலும், நல்லிலக்கியம்பற்றிய செய்திகள் அவனைச் சென்றடையச் செய்வதிலும் போதிய அக்கறை காட்டப்படவில்லை.

எழுத்தாளரும் இலக்கிய அமைப்புக்களும் யாழ்நகரில் மட்டுமே, 30 - 40 பேர்களுடன் (பெரும்பாலும் ஒரேமுகங்கள்) நடாத்தும் கூட்டங்கள் வெறும் சடங்குகள் போலாகிவிட்டன. புதியவர்களை - குறிப்பாக இளைஞர்களை- இக்கூட்டங்களில் காண்பது அரிது.

பொது வாசகரிடையில் - பரந்து வெவ்வேறு இடங்களில் - நல்லிலக்கியம்பற்றிய செய்திகளைப் பரவற்படுத்தும் முயற்சிகளே இன்றைய காலத்தேவையாக உள்ளன.

இயங்கிக்கொண்டிருக்கும் இரண்டோ மூன்று இலக்கிய அமைப்புக்களும் ஒன்றிணைந்து - செயற்திட்டம் வகுத்து - செயற்பட, இனியாவது முயலவேண்டும்!

# கறுப்பர் வாழ்வில் பூத்த விடிவெள்ளி!

□ துணைவியூர் கேசவன் □

தோல் நிறத்தில் இனம் பிரிந்ததும்
' மா ' நிறமது ஆட்சி பிடித்ததும்
மாபெரிது எனினும் கருமை யழுததும்
கொச்சைப்பட்ட கடந்த காலங்கள்.

அடிமைக்குள்ளும் இரத்தம் துடித்தது
அடிமைவிலங்கை உடைப்பமென்ற
' ஆதி ' க் குடியின் முழக்கம் கேட்டது.

உறுதியை நெஞ்சினில் சுமந்து நின்றனர்
' ஆயுதம் ' கரங்களில் ஏந்தி வந்தனர்
ஒன்றாய் உரத்து உரத்துக்கூவினர் -

' மண்டேலா! '
மண்டலமதிர
புதியதோர் ஓசை கேட்டது.

சிம்மாசனததில்
மன்னவன் ஏறினன்!
மணிமுடி சூட்டி,
கரிய கரங்கள் ஒன்றாய்ச் சேர்ந்து,
களி கொட்டியாடின:

'' அடிமை விலங்கு தெறித்தது காண்!
இருண்ட வாழ்வு மறைந்தது பார்! ''

*

---

'' ...
*அவமானங்களைத் துடைத்தெறிந்து கொண்டே*
*செல்வோம் வா*
*வெற்றி பெறுவோம் அல்லது*
*சாவைக் கடந்து செல்வோம்.''*

— சே குவேரா
*(கியூபா)*

---

# இன்னும் உறங்குதியோ என்னினிய தாய்நாடே...!

□ புதியவன் □



இன்னும் உறங்குதியோ
என்னினிய தாய்நாடே
அத்தனையும் யாராலோ
அழித்திடுவோம் பாவியரை
இத்தனையும் நடத்திவிட்ட
இழிவாரை இகழாமல்
சுத்தமாய் மன்னித்தால்
சுதந்திரம் நமக்கேது?

என்னருமைத் தாயகமே
உநதன் மைந்தர் எத்தனை பேரை
உறக்கத்தி லெரித்தார்கள்
உலை வைத்துச் சுட்டார்கள்
விலை பேசிப் பிடித்தார்கள்
வெட்டிக் கொன்றார்கள்
இத்தனையும் நடந்திருக்க
எப்படி நீ துயின்றிருப்பாய்?

வீடழித்துப் பொருளெடுத்து
விலையில்லா உயிரழித்து
நாடழித்து நகரிடித்து
நாய்களைப் போல் தமிழரையும்
அடக்கி வைத்து ஆளுவதோ
அடிமையாய் நாம் இருந்திடவோ
வாடல் நிலையின்றி
வாழ்ந்திடணும் தாயகமே!

விண்ணதிரக் குண்டு வந்து
வீழ்ந்து வெடிக்கையிலே
கண்ணெதிரே தமிழர் தமைக்
காவு கொண்டு சென்ற போதும்
அண்ணாந்து பார்த்திருந்து
அசையாம லிருப்பதுவோ
மண் மீது உறுதி கொண்டு
மாற்றானை அழித்திடுவோம்!

# நான் தவழ்ந்து நிமிர்ந்த மண்...

□ மு. விஜயராகவன் □

இன்று நான்
இடம்பெயர்ந்தவன் தான்
என்னை அகதியென்றழையுங்கள்
ஆட்சேபணையில்லை;
ஆனால் நான் குந்தியிருந்த
குடிநிலம் எனக்கு வேண்டும்.

சின்ன வயதினிலே
சிரட்டைச் சட்டிகளில்
வண்ணவண்ணக் கறிசமைத்து
விளையாடி மகிழ்ந்த மண்
எனக்கு வேண்டும்.

நான் தடுக்கி விழுந்து
முத்தமிட்டு அழுது பிரிந்த
அந்தச் செம்பாட்டுக்
கன்னிநிலம்
எனக்கு வேண்டும்.



உங்களுக்கு
நுங்கு தெரியுமா? நுங்கு
இதே போல்
பொழுதுபடும் வேளைகளில்
கரிய பனங் கூடலுக்குள்
ஓடித்திரிந்து,
பொறுக்கி முகிழுடைத்து
ஆச்சியிடங் கொடுத்து
சத்தகத்தால் அரிந்து
உறிஞ்சி உறிஞ்சிக்
குடிப்போமே நுங்கு -
அந்த நுங்கு எனக்கு வேண்டும்......
என் கிராமத்து நுங்கு -
எனக்கு வேண்டும்.

எந்தன் கிராமம்
எதிரிகளின் முற்றுகைக்குள்
சிக்கிச் சிதைந்திருக்கும் ....
குந்தியிருந்த என் குடிசை
தகர்க்கப்பட்டிருக்கும் ....
சந்தியெங்கும் மிதிவெடிகள்
புதைக்கப்பட்டிருக்கும்.

ஆனாலும், நான் தவழ்ந்து
நடைபயின்று
நிமிர்ந்த மண்
எனக்கு வேண்டும்!

# எனது காக்கைகள்!

சூரி

பாருங்கள் இந்தக் காக்கைகள் எப்போதும்
நான்
குளித்துத் துடைத்து முடித்தபின்தான்
திடீரென தோளில் எச்சமிடுகின்றன!

கிணற்றடியில்
தலைக்குமேலால் அசையும் தென்னோலையில்......
பக்கத்து வீட்டின் உயரச் சுவரில்......
இருக்கும் அவற்றை
இடைக்கிடை நான் கலைப்பதுமுண்டு;
என்றாலும் எதிர்பாராவாறு
பறந்தபடியே
அதிலொன்று எச்சமிடும்!

என்றோ எப்போ
சேர்த்த '' குற்றக் '' குப்பைகளைத்
திடீரென்று,
என் தலையில் -
'' நண்பர் '' சிலரும் எச்சம் இடுகின்றனர்!

# சாயுங்காலங்கள் கரைகின்றன

□ புலேந்தி திலீப்காந்த் □

வயல் வெளியில்
நெற் கதிர்கள்
அறுக்கப்பட்டும்,
தாலியுடன் நிற்கின்றது
தாய்நிலம்.

இந்த யுகமண்ணில்
சுதந்திரம்
வருவதற்காக -
தினம் தினம்
உயிர் கொடுக்கும்
மாவீரர்கள்......

இவர்களால்தான்
தாய் நிலம்
இன்றும்
இன்னமும்
தாலியுடன் -
நிமிர்ந்து நிற்கின்றது.



எண்ணெய் விளக்குகள்
எங்கும் எரிந்தாலும்
ஒவ்வொரு
திண்ணையும்
விடுதலைக்கு -
பிள்ளைகளை அனுப்பி
மகிழ்கிறது;
எல்லைகளைப் பார்த்து
எரிகுண்டுகளாக எரிகின்றது.

இன்றும் -
நான் குளிக்கும்
கிணறுகள் வற்றவில்லை;
உண்ணும் உணவுகள்
கைக்கவில்லை!

எல்லாம் என்றும் -
இப்பொழுதே . வருமென்ற
சமராட -
சமரை நோக்கி!

சாயுங்காலங்கள்
கரைகின்றன......

## மரித்துப்போகும் ஆசைகள்

### காவலூர் ரவி

மனம்
இடைவிடாது
ஆசைகளைப் பிரசவிக்கும்
அமுதசுரபி.
உணவுகளுக்குப்
பஞ்சமிருக்கலாம்;
ஆசைகளுக்குப்
பஞ்சமிலலை.

ஆனால்......
தொலைவானத்தில்
கொலை விமான
இரைச்சல் .....

ஆசைகள்
மரித்துப்போகும்;
கணப்பொழுதில் மரணம்
மனிதனைப் பிணமாக்கும்!



# அர்ப்பணங்கள்

**□ கற்பகன் □**



ஓ .....! மாவீரர்களே
நீங்கள் ஏகினீர்கள்
தீப்பிழம்புகளின் ஊடாகப்
பயணம் செய்தீர்கள்
உங்களுக்காகவா?

உறங்க மறந்தீர்கள்
உணவைச் சிறுப்பித்தீர்கள்
அலங்காரம் விட்டீர்கள்
உதிரம் உகுத்தீர்கள்
உங்களுக்காகவா?

இல்லையே..... !
மக்களுக்காக .....
இம் மண்ணின் மாந்தர்களிற்காக -
அவர்களின் சுதந்திர
மூச்சுக்காக! -
அச்சமற்ற வாழ்விற்காக!
அடிமைத்தனத்தை அகற்றுவதற்காக!

உங்கள் அர்ப்பணங்கள்
முருகவேளின் கற்பூரங்கள்
தேவனின் மெழுகுவர்த்திகள்
நீலவானத்து
கருமழை மேகங்கள் - நீங்கள்
பன்னீர்ப் பூக்கள்
சந்தன மரங்களல்லவா!

# நாடு கடந்துவிட்ட நண்பனுக்கு...

செ. சாயிப்பிரியன்

அன்பின் நண்பா!
அகதி என்ற பெயருடன்
அடுக்கு மாடியில் வாழ்பவனே!
கூவிவரும் ஷெல்கள்
குண்டுச் சத்தங்களைத் தவிர்த்து
இதமான வாழ்வுக்காய் நீ
இம்மண்ணை விட்டுச் சென்றுவிட்டாய்.
அங்கு
ஆளே விறைத்துப் போகும்
அளவற்ற குளிரிலும்
மனமாற்றம் தருகின்ற
மதுப்புட்டிகளிலும்
சோபா மெத்தைகளிலும்
சொகுசான சுகங்களிலும்
ஊரென்றும் உறவென்றும்
உடன்பிறப்பென்றும் இல்லாது
இயந்திரத்தோடு இயந்திரமாய்
இதயமற்று வாழ்வதிலும்
மழலையாய் நீ தவழ்ந்த
மண்ணை மறந்திருப்பாய்!



இங்கு
கூவிவரும் ஷெல்கள் குறையவில்லை
குண்டுச் சத்தங்கள் இன்னும் ஓயவில்லை
எங்கள் வீடுகள் யாவும்
எதிரியவன் பிடிக்குள்
எமது வரவை எதிர்பார்த்து
ஏங்கித் தவிக்கின்றன.
நாங்கள் ஓடிவிளையாடிய
நாகமுத்தர் வீடு இப்போ

நசியுண்டு கிடக்கிறது;
அரசமர பிள்ளையாருக்கு
'ஆமி' தான் காவல்.

எங்களின் சொந்த மண்ணின்மீதே
நாங்கள் அகதியாய் நிற்கின்றோம்;
ஆனாலும்
வீரத்தின் விருட்சங்கள் இங்கே
விழுதிறக்கிக் கொண்டிருக்கின்றன!

கோட்டை, கொக்காவில்,
கொண்டச்சி, மாங்குளம், பூநகரி எனவிரியும்
பகைவனின் பாசறைகளில் இன்று
பட்டொளி வீசிப்
பறக்கிறது புலிக்கொடி!

எனவே,
இன்னும் இங்கே நாம்
தமிழராய் வாழ்கிறோம்!

## இளங்கவிஞனுக்கு......

''......இன்றியமையாமையில் இருந்து ஓர் கலைப் படைப்பு தோன்றின் அது நல்லது. இவ்வாறான அதன் தோற்றுவாயிலேயே அதன் உண்மையான பெறுமதி தங்கியுள்ளது; வேறு பெறுமதியில்லை. எனவே அன்பரே, நான் உமக்குச் சொல்லக்கூடிய ஆலோசனை இதுவே. உமது அகத்தினுள் புகுந்து, உமது வாழ்வு ஊற்றெடுக்கும் ஆழத்தைத் துருவி ஆராயும். நீர் படைத்தேயாக வேண்டுமா என்ற வினாவிற்கு அந்தத் தோற்றுவாயில் உமக்கு விடை கிடைக்கும்.''

— ரெய்னர் மரியா ரில்கே
(ஜேர்மனியக் கவிஞர்)

# உள்ளொளி பெருக்கி...

□ செ. பொ. சிவனேசு □

பூவை என்றதில்; புகழது வந்ததில்;
பூவாய்க் கிடந்ததில்
புயலெனைச் சாய்த்தது!
அணங்கு என்றதில்; அறிவினை இழந்ததில்;
அடுப்படி அடைப்பதில்
நெருப்பெனை எரித்தது!
பதுமை என்றதில; பெருமை வந்ததில்
சந்தனமேனியாய்க் காத்ததில்
வெயிலெனைத் தீய்த்தது!
தாய்மை என்பதில் தெய்வம் என்றதில்;
,தலைக்கனம் வந்ததில்
மழையெனைக் கரைத்தது!

எத்தனை சுமைகளைச் சுமத்தலும் கூடிடும்!
வதைந்தேன்!
என்னுள் நானே புகுந்தேன்.
தெரிந்தது
உளவெளிப் பரப்பெங்கும்
இருள்மரம் மண்டிய காடென!

ஏனிது?

நறுக்கெனத் தெறித்தது தாரகைப் பொட்டு.
'புயலும் நெருப்பும் வெயிலும் மழையும்
ஆணின் உளமே -
என்னின் இருப்பை மாய்த்தவை இவையா!'
தெளிந்தேன்.

பொட்டல் வெளியெனப் பட்டென வெளித்தது
என்னின் உளவெளி -
இருளின் உருகல்;

'விணின் புகழே;
அறிவின் இழப்பு, பெருமை, தலைக்கனம்
வெற்றின் விழலே' எனவே
உள்ளொளிப் பெருக்கம்.

'பூவை, அணங்கு, பதுமை, தெய்வம்
நானல;
நானோர் மனிதம்' எனவே
உளவெளிப் பரப்பிடை வேத ஒலிப்பு.

இனியும்
புயலே நானெனப் புயலினைச் சாய்ப்பேன்
நெருப்பே நானென நெருப்பினை எரிப்பேன்
வெயிலே நானென வெயிலினைத் தீய்ப்பேன்
மழையே நானென மழையினைக் கரைப்பேன்!

## சுமை ஒட்டிய மனம்

### இணுவில் சிவகுமாரன்

வெய்யில் முற்றி
வெளிறிப் போனது.
சாலையின் குழிகளினுள்ளே
காற்று சிறையிருந்தது.
இடிந்த சுவர்களில்
இருக்க அழுத்தமின்றி
பருந்தொன்று
அலைந்து திரியுது.
புழுதி பூசிய ஒழுங்கையால்
திரும்பிய விரைவுப்பொறி
திசை மாறிப் போனது.
சாலைச் சகதியில்
'சயிக்கிள்'களும் அலைந்தன.
வேர்வை பூத்த
தேகக் கூடையினுள்
சுமை ஒட்டிய
மனக்கடிகாரம்
கிளியல்களைப் பொருத்தி
நேர்த்தியாக்கியபடி
ஒடிக்கொண்டிருக்கும்.



# அழைப்பு

□ சத்தியபாலன் □

நிஜ வாழ்வின்
நெரிசலில்
முகம் நைந்து
தொலையும்.
சொல் - நடை - செயல்
என ஒவ்வொன்றாய்
தன்னியல் பிழக்கும்

நெருங்கிய உறவும்
ஒரு பொறியின்
தெறிப்பில்
'இவன் யாரென'
விலகும்
நீ - இனித் தனி
என
வாழ்க்கை சொல்லும்.

முதுகிடலா
முகம் தரலா......
என ஒரு சமர்.

புவி தரும்
அனுபவமும் தானுமாய்
உரம்பெறத்தானே
இப் பாடுகள்?

தற்காத்து
நீயே தனி
என நிமிர்;
உன் பலம் உணர்......
அகண்ட இப் பிரபஞ்சத்தில்
உனதிருப்புக்கும்
ஓர் அர்த்தம்......
உனதும் ஒரு பங்கு!
மனிதம் சுமந்து நட
வா ..
வாழ்வினைப் பாடு!

# பொய்க்காத நண்பர்கள்

□ ஜித்து □

வந்த உறவுகள் சில
சென்றனவோ பல.

நிலைக்குமென்ற உறவு
கலைந்தது கணப்பொழுதில்;
வந்த நண்பர்களும்
வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சிச்
சென்றனர்;
சிரித்தபோது கூடிய பலர்
அழுதபோது அருகில் இலர்.

என்னுடன் ஒன்றி
ஒத்தாசை பல புரிந்து
எனக் கெஜமானாகவும்
சேவகனாகவும் பணிசெய்து
விட்டகலாப் பிரிய நண்பர்கள்......
எனது புத்தகங்களே!

நேற்று ஒன்றைச்சொல்லி,
பகர்ந்ததோ வேறொன்று இன்று -
நாளை பிறிதொன்கூறத்
தன்னலத்தால் திரித்துக் கூறி
சுயலாபம் தேடும்
ஈனக் குணமில்லை அவர்க்கு.

என்றும் பொய்க்காத என்
நண்பர்கள் அவர்தான்!

''எனது வார்த்தைகள் நம்பிக்கையைக் கொண்டுவேந்தன
வழிகாட்டும் நட்சத்திரமாக ஒளிவிட்டன
சுற்றிலும் அதிக வெளிச்சமுள்ள விளக்கேற்றின
ஒரு குருடன் துணையின்றியே போகலாம் ''
— விடாடஸ் மோண்ஸிலா
(ரஷ்யா)

# இளைய தலைமுறை!

□ மீசாலையூர் கமலா □

குட்டக் குட்டக்
குனிந்த தலைவர்களல்ல
இவர்கள்......
கிட்ட நின்று,
திட்டமாய்ப்
பதில் சொல்லும்
புதிய தலைமுறை!

ஆளும் போதையால்
உளறுபவர்க்கு,
கிட்ட நின்றுகொண்டு
'' எட்டச் செல்' லென்று
' கொடுத்து ' நிற்கிறது,
இளைய தலைமுறை!

வருகின்ற தலைமுறை
வளமாய் வாழ்ந்திட
துயரக் கடலைக்
கடக்கிறது இந்த
இளைய தலைமுறை!

☆ இளங்கவிஞர்களே! இது உங்களுக்கான இதழ்; தயக்கமேது மின்றி உங்களின் ஆக்கங்களை அனுப்புங்கள். ஓரளவு தரமாயிருப்பவையும் திருத்தங்களுடன் வெளியிடப்படும்; உங்களின் வளர்ச்சியே எமது அக்கறை.

☆ தத்தம் பாடசாலையிலோ ஊரிலோ 'கவிதை' இதழை [குறைந்தது ஐந்து பிரதிகள்] விநியோகிக்க விரும்பும் மாணவர் - இளைஞர் - ஆசிரியர் - எம்முடன் தொடர்பு கொள்ளலாம்; உரிய கழிவு வழங்கப்படும்.

— ஆசிரியர்
' கவிதை '

# என் ஒழுங்கை

□ நாக. சிவசிதம்பரம் □

காலக் குழந்தையின்
'கிலுகிலுப்பை' யாய் ஒலிக்கும்
கோயில் மணிகள்......

நாணிச் சிவந்த முகம்
நகைபுரியக் காலை எழும்
நாதசுர மேள இசை......

காவடிகள் கூத்துக்கலைகள்
பரதம் இசை
பூத்துக் குலுங்கும் பொழுது
இந்தப் பூமிக்கு மாலையிட
பூக்களினை ஆளனுப்பும்
சூரியனை .....
சூரியனை மேலில்
சுமக்கும் உழவரினை......

ஏலேலோ பாட்டில் உயிர்
ஊறிக் கடலில் - எதிர்
நீச்சலிட்டோடி
நிமிரும் நீருழவரினை......

தலையின் மேல் வெள்ளத்
தத்தளிப்பின் போதருகில்
அயலென்று கூடும் - மன
ஆதரவை......

என் ஒழுங்கை - தெரு இழந்து
ஏங்குவதாய் ஒரு நினைவு......

வீட்டினுள் புழுதியும்
வீதியில குடிசையும்
வாழுதலாய் - ஓர் உலகும்......

வெறுமையில் வேரூன்ற
வேண்டாமெனும் மனசு......!

# நேர்காணல் :
# மைதிலி அருளையா

1989 இல் ' திசை ' வாரவெளியீட்டில் வெளியாகிய கவிதைகள்மூலம் பலரின் கவனத்தை ஈர்த்தவர் செல்வி ' மைதிலி அருளையா '. கவிதையாக்கத்தில் ' மன உணர்வின் உந்துதலை ' முக்கியமானதாகக் கருதும் இவர், யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் ' ஆங்கில டிப்ளோமா' பயிலும் மாணவி.

□ *என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?*

○ . முழுநேரக் கற்கைநெறியாக 'ஆங்கில டிப்ளோமா' வினையும் பகுதிநேரமாக உளவியல் கற்கைநெறியையும் பயில்கின்றேன்.

□ *கலை, இலக்கியம் மீதான உங்கள் ஈடுபாடுகள் பற்றி......*

○ கலை, இலக்கியத்துடனான எனது ஈடுபாடானது பெரிதும் குறிப்பிடத்தக்க அளவினது என்று சொல்வதற்கில்லை. கலை, இலக்கியத்தில் எனது பரிச்சயம் அல்லது கலை இலக்கியத்திற்கு நான் பரிச்சயம் என்பது மிகக் குறைந்தளவிலேயே உள்ளது. எனது ஈடுபாடானது சிறு கதைகள், நாவல்கள் என்கின்ற தளங்களினூடாகவே ஆரம்பத்தில் பிரவேசித்தது. அதன்பின்பே கவிதைகள், கட்டுரைகள் என்பதாக விரிவடைந்தது. மொழிவளர்ச்சி பற்றிய எனது தாயாரின் பிரக்ஞையும் அதனுடனான ஊக்குவிப்புமே, என்னை இத்துறையைப் பரிச்சயம்கொள்ளச் செய்தது. ஆரம்பகாலங்களில் புத்தகங்கள் தெரிவு செய்வதில் அவர் ஒரு அற்புதமான வழிகாட்டியாகத் திகழ்ந்ததை, என்றும் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளேன். கல்லூரி நாட்களில் நாடகங்களில் ஆர்வமாகக் கலந்துள்ளேன்; இந்தக் காலகட்டத்திலேயே எனது கவிதைகள் வெளியாகின ஓவியங்களிலும் இசையிலும் ஓரளவு ஈடுபாடு, எனக்கு ஆரம்பகாலத்திலிருந்தே இருக்கிறது.

☐ *உங்கள் வெளிப்பாட்டு வடிவமாகக் கவிதையை ஏன் தெரிந்தீர்கள்?*

○ எனது மூத்த சகோதரியின் கவிதையாக்கச் செயற்பாடுகளே அதுபற்றியதான ஒரு வடிவத்தை எனக்கு அறிமுகம் செய்தன அத்துடன் உணர்வுகள், உந்துதல்களின் பிரதிபலிப்புக்களை ஆழ்ந்த உள்ளுணர்வுடன் வெளிப்படுத்தக் கூடிய வடிவமாகக் கவிதை எனக்குத் தென்படுகிறது.

☐ *மரபுக் கவிதைகளில் ஈடுபாடு உண்டா?*

○ குறிப்பிடும்படியாக இல்லை எனலாம்; ஆனாலும் மரபுக் கவிதைகள் படிப்பதுண்டு.

☐ *உங்களது கவிதையாக்கச் செயற்பாடு எவ்வாறு அமைகிறது?*

○ பொதுவாக எனது படைப்பாக்கச் செயற்பாடுகளானவை எனது சுய அனுபவங்களின் வெளிப்பாடுகளாகவும், பிறரது அனுபவங்களை எனக்குள் வாங்கி - வாழ்ந்து அனுபவித்து, அவற்றினுடைய வெளிப்பாடுகளாகவுமே அமைந்துள்ளன. இதிலும் பிறருடைய அனுபவங்களை - அவர்களுடைய உணர்வுத் தளத்தை - உள்வாங்கி, அதே நிலையிலேயே வெளிப்படுத்தப்பட்ட கவிதைகளே அதிகமானவையாக உள்ளன. கவிதையாக்கத்தில், மன உணர்வின் உந்துதலே வெளிப்பாட்டிற்குரிய மூலகாரணமாக அமைவதாக உணர்கிறேன்.

☐ *உங்கள் கவிதைகளின் பிரசுர விபரங்களைச் சொல்லுங்கள்.*

○ குறிப்பாகத் திசையிலும் உள்ளத்திலுமே எனது கவிதைகள் இதுவரை வெளியாகி உள்ளன.

☐ *பெண்ணிலைவாதக் கருத்துக்களில் உங்கள் ஈடுபாடு ...?*

○ பெண்ணிலைவாதக் கருத்துக்களில் எனக்கு ஈடுபாடு அதிகம் உண்டு. இந்தச் சமூகத்தில் நான் பெண்ணாக இருப்பதோடு 'பெண்மை' என்ற புனைவாக்கங்களோடும் இருப்பதனால், இது அதிகமாக இருப்பதாக உணர்கிறேன். அதனாலேயே எனது படைப்புகளில் குறிப்பிடக்கூடியவை பெண்ணியம் சார்ந்ததாகவே அமைந்துள்ளன. குறிப்பாக எனது படைப்புக்கள் 'நான் ஒரு பெண்' என்ற ரீதியில் படைப்பாக்கம் பெறுவதையே அதிகம் விரும்புகிறேன்.

☐ *இவை உங்கள் கவிதைகளில் எவ்வாறு வெளிப்பாடு கண்டுள்ளன?*

○ பொதுவாகப் பெண்ணியம் சார்ந்த கருத்துகளோடு, இந்த சமூகத்தில் வாழும் பெண்ணின் வாழ்வியல் துயரங்களை - அவள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை - உள்வாங்கி, அவற்றை எனது அனுபவங்களுடன் இணைத்து உந்து முனைப்புடன் வெளிப்படுத்தியுள்ளேன். உதாரணமாக கவிதை முதலிதழில் வெளிவந்த எனது கவிதையான 'சுயரூபங்கள்', ஒரு பெண் தான் எதிர்கொள்கின்ற போலித்தனங்களை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

☐ *உங்களைக் கவர்ந்த கவிஞர்கள்...... குறிப்பாகப் பெண் கவிஞர்கள்?*

○ ஈழத்துக் கவிஞர்களிலிருந்து உலகக் கவிஞர்கள் ஈறாகப் பலரைக் குறிப்பிடலாம். பெண் கவிஞர்களில், தான் பெண் என்ற பிரக்ஞையுடன் படைப்பாக்கத்தில் ஈடுபடுகின்றவர்களின் கவிதைகளே என்னை அதிகம் ஈர்க்கின்றன.

☐ *'கவிதை' இதழ் தொடர்பாக என்ன கூறவிரும்புகிறீர்கள்?*

○ இங்கு இலைமறைகாயாக இருக்கின்ற இளங்கவிஞர்கள் பலரை அரங்கிற்குக் கொண்டுவருவதில் அதனுடைய பொறுப்பு அதிகமாகவே உண்டு. உலக அரங்கில் ஏற்படுகின்ற கவிதைகள் சார்ந்த புதிய போக்குகளையும், வாதப் பிரதிவாதங்களையும் தமிழ்ச் சூழலிற்கு ஓரளவாவது அறிமுகப்படுத்துவதிலும் அதனுடைய தேவை உணரப்படுகிறது.

*''உள் தீயை - உயிரூட்டும் சக்தியைத் தூண்டிவிடு -*
*உருவாக்கம் நடைபெற;*
*அது மறைந்து போனால்*
*உதவியில்லாததைப் போல நீ உணர்வாய்.''*

- லியோனிட் வில்கோமிர்
*(ரஷ்யா)*

# இன்னொரு ஸ்பாட்டகஸ்*

மைதிலி அருளையா

ஸ்பாட்டகஸைப் பற்றிய எனதுபார்வை
விரிந்து வருகின்றது
சாம்பற் புழுதிபடிந்த கண்கள்
அவனை நாள் தோறும்
கவனிக்கின்றன.
எப்போதும் உருவகிக்கப்படும்
உருவிலிருந்து
நான் விடைபெறுகிறேன்
சுருண்ட கூந்தற்சிக்குகளிலிருந்து
வெளியேறிச் செல்கிறேன்
கிணற்றங்கரை அழுக்குத்துணிகள்
குவியலாகும்
நீர் சுமக்கும் பாத்திரங்கள்
வெறுமையாய் முழியும்.
காமம் மிகுந்த கண்களும்கைகளும்
வெற்றிடத்திலே
வெறிகொண்டு அலையும்
கிழிந்த வாய்களிலிருந்து,
வெளித்தெரியும்
கோரப்பற்களிடமிருந்து,
வம்புப் பேச்சுக்களிலிருந்து,
எனக்கான
பொறிக் கிடங்குகளிலிருந்து
நான் தப்பிச் செல்லல் வேண்டும்.
இன்னும்,
ஸ்பாட்டகஸை நோக்கிய
எனது பார்வை விரிந்து வருகிறது.
அவனுடன் தோழமையுற
விரும்புகிறேன் நான்.
ஸ்பாட்டகஸைப்பற்றிய காதல்
முடிவில்,
என்னையும் ஸ்பாட்டகஸாக்கும் !

* ஸ்பாட்டகஸ் - மோசமான அடிமைமுறை நிலவிய காலத்தில், அடிமைகளாக்கப்பட்டோரின் சுதந்திரத்தின்பொருட்டுக் கிளர்ச்சி செய்த இரேக்க இளைஞன்.

\- 12.01.1991

# மஹாகவி என்றொரு மகாகவி

□ □ வளவை வளவன் □ □

*''இன்னவைதாம் கவிஎழுத*
*ஏற்றபொருள் என்று பிறர்*
*சொன்னவற்றை நீர் திருப்பிச்*
*சொல்லாதீர்!*
*சோலை, கடல்,*
*மின்னல், முகில், தென்றலினை*
*மறவுங்கள் மீந்திருக்கும்*
*இன்னல்,உழைப்பு, ஏழ்மை, உயர்வு*
*என்பவற்றைப் பாடுங்கள்''*

என்ற அறைகூவலோடு கவிதா உலகில் கால்பதித்த பெருங் கவிஞன் இவன். 'பண்டிதன்' என்ற பெயரில் கவியுலகில் நுழைந்த இக்கவிஞன், தனக்குள் பொங்கிக்கொண்டிருந்த கவிதைத் தன் மையின முழுமையைப் புரிந்துகொண்டதாலோ என்னவோ, மஹாகவி என்ற பெயரைத் துணிவாகவே தன் புனைபெயராகச் சூடிக்கொண்டு, கவியுலகில மகாகவியாகவே வாழ்ந்துகொண் டிருக்கின்றான்.

ஈழத்து நவீன தமிழ்க் கவிதை முன்னோடிகளுள் முதன்மை யான இடத்தைத் தனதாக்கிக்கொண்ட இக்கவிஞன், கவியுலகின் பலபுதுமைகளின் கர்த்தாவாகத் திகழ்கின்றான். கிராமிய வழக் குச் சொற்களையும், பேச்சுவழக்குச் சொற்களையும் தனது கவி தைகளில் சரளமாகவும், இலாவகமாகவும் கையாண்ட அற்புத மான ஒரு கவிஞன்; இதனால் ஈழத்துக் கவிதை வளர்ச்சியில் முன் வரிசையில திகழ்பவன்.

இத்தகைய பெருமைகளின் சொந்தக்காரனான மஹாகவி 9.1.1927 இல் சாதாரணமான ஒரு குடும்பத்தில் பிறந்தார். யாழ்ப்பாணத்தில் பல சிறந்த கலைஞர்களின் பிறப்பிடமான

அளவெட்டிக் கிராமமே இவரது ஊராகும். இவரது தந்தை துரைசாமிகூடப் புகழ்பெற்ற நாதசுரக் கலைஞரென்றே அறியமுடிகின்றது. இவருக்கு இவர் தந்தையாரிட்ட பெயர் உருத்திரமூர்த்தி என்பதாகும்.

உருத்திரமூர்த்தி தனது 14ஆவது வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார். தனது 19ஆவது வயதிலே எழுதுவினைஞராகி அரசசேவையைத் தொடர்ந்தார். இவரது ஊக்க மிகுதியாலும் அயராத உழைப்பினாலும் பின்னாளில் 'இலங்கை நிர்வாக சேவை' (C.A.S) பரீட்சையில் சித்திபெற்று, மாவட்டக் காணி அதிகாரியாகப் பதவி வகித்தவர். 1970களின் ஆரம்பத்தில் அரசகருமமொழித் திணைக்களத்தில் உதவி ஆணையாளராகப் பதவிஏற்று, தான் இறக்கும்வரை இப்பதவியைப் பெருமைப்படுத்தினார்.

1943 இல் இருந்து மஹாகவியின் கவிதைகள் கிராம ஊழியன், மறுமலர்ச்சி, ஈழகேசரி, ஆனந்தன் போன்ற அன்றைய பத்திரிகைகளில் பிரசுரமாகியதாக அறியக்கிடக்கின்றது. சிறந்த மானிடநேசியான இவர், சாதாரண மக்களின் வாழ்க்கை முரண்பாடுகளையே கருவாகக் கொண்டுள்ளார். யாப்புககவிதையின் ஓசைநயங்களிலே மாற்றங்களைப் புகுததி, பேச்சோசைச் சொற்களை இணைத்து, பேச்சுத்தமிழைக் கவிதைக்குள் புகுத்தியவர் இவர்.

'பாடுங்கள் அத்தான்' என்ற கவிதையிலே, ''விட்டுக் கொடுககாத/வெகுபழைய யாப்புமுறை/ தட்டிக் கொடுத்திடுமோ/ தமிழர்களின் கவியுணர்வை?'' என்று கேட்பதன்மூலம், பழைய யாப்பு முறையை விடுத்து கவி எழுத முடியாதா என்ற ஒரு கேள்வியை, மறைமுகமாகக் கேட்டு நிற்கிறார். இது அவரது புதுமை வேண்டும் போக்கினையன்றோ காட்டுகின்றது? பழைய யாப்பு விதிகளிலுள்ள பண்டிதச் செருக்கை மனதிற்கொண்டு இப்படிப்பாடியுள்ளார் என, ஆய்வாளர் கூறுவர். ''பழையயாப்பு வடிவங்களைப் பேச்சோசைப்பாங்கில் எளிமைப்படுத்தி, இலாவகமாகத் தற்கால உரைநடைக்குச் சமாந்தரமாக வளர்த்தவர். கிராமிய வழக்குமொழியைக் கவிதையில் தாராளமாகக் கையாண்

டவர். இத்தகைய காரணங்களால் தற்காலத்துத் தமிழ்க் கவிதை வளர்ச்சியில் மஹாகவி மிக முக்கிய இடம் பெறுகின்றார்.''

- எம்.ஏ.நுஃமான்(மஹாகவி கவிதைகள்)

கவிதைகள், பா நாடகங்கள், குறுங்காவியங்கள், வானொலிப் பா நாடகங்கள் போன்ற பல நல்ல படைப்புக்களை மஹாகவி தந்துள்ளார். இவரது படைப்புக்களில் குறும்பா, கண்மணியாள் காதை கோடை, ஒரு சாதாரண மனிதனது சரித்திரம், இரண்டு காவியங்கள், வீடும் வெளியும், புதியதொரு வீடு, வள்ளி போன்றவை நூல்வடிவில் வெளிவந்துள்ளன. இவரது வெளியிடப்படாத படைப்புக்களும் வெளிவருமேயானால், மஹாகவி இலக்கிய உலகில் மேலும் உன்னதநிலையைப் பெறுவாரெனக்கொள்ளலாம்.

''மஹாகவி இன்னும் முழுமையாகப் புரிந்துகொள்ளப்படவில்லை; பரவலாக விமர்சிக்கப்படவில்லை. தமிழகத்தில் மிகச் சிலரே மஹாகவிபற்றித் தெரிந்திருக்கிறார்கள்'' என்று எம்.ஏ. நுஃமான் குறிப்பிடுகிறார். இதற்கான பதிலை ஆய்வாளர்களும் காலமும் தேடிக்கொள்ளட்டும்

மஹாகவி இதய நோயால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தார் வாழ்விற்கும் சாவிற்குமிடையே தோன்றும் மரணபயத்தை அவர் கடுமையாகச் சாடினார் ''காலா இங்கு வாடா உனைக் காலால் உதைக்கின்றேன்' எனக் காலனுக்குச் சவால் விட்ட பாரதியைப் போலவே மஹாகவியும்,

*''கொண்டுவா பார்ப்போம்*
*கொலை எருமை பூட்டியதின்*
*வண்டியினை எனது வாசலுக்கு!*
*நான் இங்கே*
*சூழ்வேன்;*
*சுழல்வேன்;*
*சுமப்பேன்;*
*சுவைத்திருப்பேன்;*
*வாழ்வேன் மடியும் வரை''*

என்று 'இதயகீதம்' கவிதையில் காலனுக்கு அறைகூவல் விடுத்தார். ஆனால் காலன் என்ற பகைவன் அந்த உன்னத கவியை-மகாகவியை - 1971 யூன் 20ஆம் திகதி, மீளா உலகிற்கு அழைத்துச் சென்றுவிட்டான். ஆனாலும் மஹாகவி மகாகவியாக இன்றும் - என்றும் - வாழ்வார் என்பது வெள்ளிடைமலை! ✻

# தேறல்

எழுபதுகளில் கவிஞனாக மலர்ந்த 'புதுவை இரத்தின துரை'யின் ஐந்து கவிதைநூல்கள் இதுவரை வெளியாகியுள்ளன. தமிழீழத்தின் சமகால உணர்வுகளை இவரைப் போல் துல்லியமாய்ப் பதிவுசெய்த வேறு கவிஞர் யாரும் இல்லை. தற்போது, தமிழீழ விடுதலைப் புலிகளின் 'கலை, பண்பாட்டுக் கழக'ப் பொறுப்பாளராகச் செயற்படுகிறார்.

## தாயகத்தைக் காதல் செய்!

□ புதுவை இரத்தினதுரை □

'' தம்பி டேய்!
நீ கோப்பாய்த் தவராசா வாத்தியின்ர
தம்பியல்லே......
எங்கை பயணம்...... கனடாவோ
அடிசக்கை .....
போங்கோ...... போய்த்திரும்பி
பிறகெல்லாம் முடிஞ்ச பின்னர்
வாங்கோ, கிழடுகள்
வரவேற்கக் காத்திருப்போம்.''

நெருப்புக்குள் நின்றும் நிமிர்ந்தோம்;
சிரிக்கின்றோம்
இருப்பிழந்து போகாமல் இன்னும் இருக்கின்றோம்.
பெருமைப்படு.
தேகம் புல்லரிக்க நின்றாடு
தொழுதெம் மண்மீது தொடு
கண்ணில் வை.

புழுதிமண்ணானாலும் புரண்டு விழுந்தெழும்பு
தாயை நிகரெங்கள் தாயகத்தைக் காதல் செய்.
வாயால் புகழ்ந்தேற்றி வாழ்த்து.
இம்மண்ணில்
வீரம் விளைக்கின்ற வீரர்களை மனத்தெண்ணு.
பாரம் சுமக்கின்ற பாலகரைக் கட்டியணை.
நேற்றுவரை தூங்கி நினைவிழந்து
எதிரியெனும்
கூற்றுவனுக் கிலக்காகி
குலைந்தழிந்த தமிழினத்தை
ஆற்றுப்படுத்தவந்த அத்தலைவன் பெயரைச்சொல்.
மாரியெனக் குண்டு மழைபொழியும்;
எறிகணைகள்
கூவிவரும்;
வீதிகுழியாகும்......
நாங்களிங்கு
நாறிப்போய் விட்டோமா?
நடைப்பிணங்க ளானோமா?
இல்லை......!
இதற்குள்ளே இருக்கப் பழகிவிட்டோம்.
புல்லும் நிமிர்ந்து போர்க்கோலம் பூண்டதுபோல்,
வெல்வோம் எனும் உறுதி
வீச்சோடு வாழ்கின்றோம்!
ஆனைவந்தெங்கள் அழகான வயலுக்குள்,
சேனை புலவுக்குள்
தின்கிறது.
வழியாலே......
போய்வாற பேரைப் பிடித்து மிதிக்கிறது.
காய்கூய் என்றாலும்
கத்தித் தொலைத்தாலும்
வாய்நோகுதன்றி ''வாரணங்கள்'' போகுதில்லை.
வெடிகொளுத்திப் போட்டால் வெருண்டோடும்
அதற்கிங்கே
பொடியள் சிலபேர்கள் போதுமா?
கனபேர்கள்
வேண்டும் என்செய்வோம்
விருத்தெரிந்த இளசெல்லாம்

கூண்டுதிறந்து...... குருவிகள் போல்......
கடற்பரப்பைத் தாண்டி,
தங்களது
தனிச்சுகமே சுகமென்று,
திக்கொன்றாய்ப் பறந்து திசைமாறிப் போயினவே!
தக்க தருணத்தில் தாய்மண் துணையின்றி
துக்கித் திருக்கிறது.
தொப்புள் கொடியுறவு
எல்லாம் பொய்யாகி இல்லாததொன்றாகி
பலதேச மெங்கும் பறந்து சிதறினவா?
என்றாலும் நாங்கள் 'இருப்பை' இழக்கவில்லை!
தென்னை இளநீரும்
செவ்வலரி சிறுபூவும்
கண்மலர்த்தி, வேம்பு காய்பழமும் தருகிறது.
கத்தரியும்
வெண்டிக்கன்றும்
பூக்கிறது.
சட்டிக்கரணை தழைக்கிறது.
இந்தமண அழகோடு இன்றும்தான் இருக்கிறது;
எந்தத்துயர் வரினும் இனிக்கலக்கம் கொள்ளாது!
ஆழக்கிணறு,
ஆடுகால் பூவரசு,
நீளக்கிடக்கின்ற நெல்வயல்கள்
உள்ளமட்டும்
காலில் விழுந்து எவர்க்கும் கைகட்டி நிற்காது!

நேற்றென் பேரன் நேர்வந்தான்;
என்னைக்கட்டிக்
காற்றில் மிதந்தான், களித்தான்,
முத்தமிட்டான்.
வரம்பில் இருந்தான், வாய்க்காலின் தண்ணீரை
விரும்பிக் குடித்தான், வெளிக்கிட்டான்.
''எங்கையடா போகின்றாய்?''
என்றேன்.
அவன் நின்றான்!
''சண்டைக்கு'' என்று சத்தமிட்டுச் சொல்லிவிட்டுச்
சென்றான்!
இனியெங்கள் தேசம் பணியாது.
தாய் மண்ணைக் காதலிக்கும் தளிர்கள் இருக்குமட்டும்
பாய்விரித்தெம் தேசம் படுக்காது;
போர் செய்யும்!
- 1992 ❋

# கவிதைக் கலை

## சோ-பத்மநாதன்

2

### சொல்லும் செய்தியும் சொல்லாத செய்தியும்

கவிதை என்பதுதான் என்ன? 'உள்ளத்திருப்பது கவிதை'' என்றார் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை. ''தலைசிறந்த சொற்களை தலைசிறந்த ஒழுங்கில் கோப்பது கவிதை'' என்பது ஆங்கிலக் கவிஞர் கோல்றிட்ஜ் தந்த விளக்கம். ஆயின், தலைசிறந்த சொற்கள் எவை என்ற வினா எழுகிறது. அகராதியில் உள்ள 'சிறந்த' சொற்களைப் பொறுக்கிக் கோப்பதால் கவிதை படைக்கமுடியுமா?

''குழம்பிய உணர்வுகளின் தெளிந்த வெளிப்பாடே கவிதை'' என்றார் ஆடன் (W.H. Auden) என்ற கவிஞர். இவர் தரும் வரைவிலக்கணம் கவிதையை உணர்வோடு தொடர்பு படுத்துகிறது. உணர்ச்சி நெஞ்சில் இருப்பதாகச் சொல்வது மரபு. உணர்ச்சி வெளிப்பாடே கவிதையாயின், கவிதையும் உள்ளத்தில் இருந்துதானே வரவேண்டும்? ஆக, கவிமணியின் கூற்றுப் பொருள் பொதிந்ததாகிறது.

''கவிதை இதயம் சம்பந்தப்பட்டது. காதலும் இதயம் சம்பந்தப்பட்டது. ஒருவரை யாராவது காதல் வயப்படும்படி நிர்ப்பந்திக்க முடியுமா?'' என்று கேட்கிறார் ஜேம்ஸ் றீவ்ஸ் James Reeves) என்ற விமர்சகர் அதாவது, கவிதை தானாக வரவேண்டும் என்பது அவர் கருத்து. ''மரத்தில் இலை தோன்றுவது போல இயல்பாகக் கவிதை வரவேண்டும்'' என்று கீற்ஸ் ஒரு முறை குறிப்பிட்டதுண்டு.

உண்மையில், கவிதையை இன்னதென்று விளக்க முடியாது; உணரத்தான் முடியும். கவிதை கடவுள் போல; நாம்

தரும் வரைவிலக்கணங்களுக்கு அகப்படாது நழுவிக்கொள்கிறது.

கவிதை எங்களுடைய உணர்வுகளைப் பண்படுத்துவதன் மூலம் உலகை - வாழ்க்கையை - புரிந்துகொள்ளும் ஞானத்தைத் தருகிறது.

"பாட்டினைப் போல் ஆச்சரியம் பார்முழுதும் இல்லையடா" என்றான் பாரதி. Poetry should surprise by a fine excess" என்றான் கீற்ஸ். கவிதை நமக்கு எதிர்பாராத வியப்பைத் தருவது. கவிஞர்கள் இந்த வியப்பை எப்படி ஏற்படுத்துகிறார்கள்? மிகவும் அதீதமானவற்றுக்கிடையில் ஓர் ஒப்புமை காண்பார்கள்; முடிச்சுப் போடுவார்கள். ஓர் உதாரணம் பார்க்கலாம்:

பொழுது புலர்கிறது. இருளும் ஒளியும் கலந்த மைமல். கவிஞன் சொல்கிறான்:

*"கோப்பிக்குள் பாலையள்ளிக் கொட்டினாற்*
*போலிருட்டைச்*
*சாப்பிட்ட கிழக்கு வானம் சரியாக வெளுக்க"*

(மஹாகவி)

கரிய கோப்பிக் குழம்பும் வெண்மையான பாலும் இரண்டறக் கலந்து கிடப்பதுபோல, ஒளியும் இருளும் கலந்து கிடந்தன என்கிறான். பாற்கோப்பிக்கும் மைமற் பொழுதுக்கும் 'மஹாகவி' ஏற்படுத்தும் தொடர்பு எம்மை வியப்படையச் செய்கிறது.

"கவிதை முகம் பார்க்கும் கண்ணாடி போல. உள்ளே பார்க்கும் எவரும் அடுத்தவர் காணும் விம்பத்தைக் காண்பதில்லை; ஏனெனில் இரண்டு பேர் ஒரேமாதிரியாக இருப்பதில்லை" என்கிறார் டேவிட் றைற் (David Wright). வேறுவிதமாகச் சொலவதானால், ஒவ்வொரு வாசகனுடைய அநுபவப் பரப்பும் வேறு.

கவிதையை அணுகும்போது நாம் நம்முடைய அநுபவத்தையும் கொண்டு போகிறோம். கவிதை தரும் இன்பம் எமது

தரத்துக்கு - அநுபவத்துக்கு ஏற்ப வேறுபடுகிறது. ஒருவர் 'ஓஹோ' என்று கொண்டாடும் கவிதையை மற்றொருவர் 'உதவாது' என்று ஒதுக்குவதற்கும் அல்லது ஒருவர் 'குப்பை' என்று வீசும் கவிதையை இன்னொருவர் கோபுரத்தில் ஏற்றுவதற்கும் காரணம் இதுதான்.

கவிதையும் செய்யுளும் ஒன்றெனப் பலர் மயங்குவதுண்டு. நமது நிகண்டுகள், சோதிட, மருத்துவ நூல்கள் எல்லாம் செய்யுள் வடிவில் எழுதப்பட்டவையே. ஆனால் அவற்றை யாரும் கவிதை என்று கொண்டாடுவதில்லை. ஏன்?"திண்ணை என்பது தெருவில் உயர்ந்தது" என்று சொல்வதற்குக் கவிதை ஏன்? உரைநடையே அந்தப் பணியைச் செய்யப் போதுமானது. உரைநடைக்கில்லாத ஒன்று கவிதைக்கு இருக்கிறது; அது தான் குறிப்பால் உணர்த்தும் ஆற்றல் நேரடியாகச் சொல்வதை விட, குறிப்பால் உணர்த்துவதற்கு வலு அதிகம்.

உச்சி வெய்யில். வழிநடந்த களைப்பு தாகத்தால் தவித்தபடி ஒருவன் வருகிறான். எதிரே ஓர் ஆய்ச்சி; மோர் விற்பவள் வருகிறாள். அவளை நிறுத்தி, மோரை வாங்கி, மட மட என்று பருகுகிறான் வழிப்போக்கன். இரண்டு பேணி பருகும் வரை அவனுக்கு எதுவும் வித்தியாசமாகத் தெரியவில்லை. மூன்றாவது பேணி பருகும்போதுதான், தான் குடிக்கும் மோரில் நீர் அதிகம் என்பது தெரிகிறது. "மோருக்குள் நீரை விட்டாயா? அல்லது நீருக்குள் மோரை விட்டாயா?" என்று ஏசவில்லை அவன். மோர்க்காரியை விளித்துப் பேசவே இல்லை அவன், மோரை விளித்துப் பேசுகிறான்:

"வானத்தில் இருக்கும்போது உனக்கு முகில் என்று பேர். மண்ணில் இறங்கியபின் உனக்கு நீர் என்று பேர். இந்த ஆய்ச்சி கையில் வந்தபின் உனக்கு மோர் என்று பேர். ஆக, மூன்று பேர் பெற்றுவிட்டாயே!"

*"காரென்று பேர்படைத்தாய் ககனத்துறும் போது*
*நீரென்று பேர்படைத்தாய் நெடுந்தரையில் வந்தபின்*
*வாரொன்று மென்முலையாள் ஆய்ச்சியர்கை வந்ததன்பின்*
*மோரென்று பேர்படைத்தாய் முப்பேரும் பெற்றாயே!"*

மேம்போக்காகப் பார்த்தால் மோரைப் புகழ்வதாக

அமைகிறது பாடல். ஆனால் அது உணர்த்தவந்த பொருள்: 'மோர் முழுவதும் நீர்' என்பது.

இன்னோர் உதாரணம்: போருக்குப் போன தலைவன் போர் முடிந்து ஊர் திருப்புகிறான். தலைவியின் நினைவே அவனை முற்று முழுதாக விழுங்கிவிடுகிறது. அவளிடம் போய்ச்சேர வேண்டும் என்ற ஆவல். தன் தேர் போகும் வேகம் போதவில்லை. தேர் ஓடுகிறதா, நிற்கிறதா? என்று பார்த்துக் கொள்கிறான். அண்ணாந்து பார்க்கிறான். காற்றில் மிதந்து செல்லும் முகில்கள். "ஓ, இவை எனக்கு முன்னே போய்ச் சேர்ந்து விடும், அவளுக்கு ஒரு செய்தி சொல்லிவிடலாம்!" என்று துணிகிறான்.

"ஓடும் மேகங்களே, என் காதலியைக்கண்டால் ஒரு செய்தி சொல்லுங்கள்: ஓடாத தேரிலே வெறுங்கூடு ஒன்று வந்து கொண்டிருக்கிறது!"

*"ஓடுகிற மேகங்காள் ஓடாத தேரில்வெறுங்*
*கூடு வருகுதென்று கூறுங்காள்!"*

'வெறுங்கூடு வருகிறது' என்பது வெளிப்படையான செய்தி. 'இந்த உடற்கூட்டில் இருந்த உயிர் முன்னமே அவளிடம் போய்விட்டது' என்பது சொல்லாத செய்தி. சொல்லுகிற செய்தியைவிட, சொல்லாத செய்தியே கவிதையில் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஒரே கவிதை பல தளங்களில் நின்று பொருள் தரவல்லது. இந்த வசதி உரைநடைக்கு இல்லை. 31ஆம் பக்கத்தில் உள்ள 'நீயும் நானும்' என்ற கவிதையைப் படித்துப் பாருங்கள். 'நீ' என்பது யார்? 'நான்' என்பது யார்? மனைவி கணவனுக்குச் சொல்வதாகக் கொள்ளலாம். ஒரு பிள்ளை பெற்றோருக்கு அல்லது ஆசிரியருக்குச் சொல்வதாகக் கருதலாம். ஒரு தொழிலாளி முதலாளிக்குச் சொல்வதாக இருக்கலாம். தமிழன் சிங்களவனுக்குச் சொல்வதாகக் கொள்ளலாம். ஆளப்படுவோன் ஆள்வோனுக்குச் சொல்வதாகக் கருதலாம் இந்தத் தளங்கள் எல்லாவற்றுக்கும் இக்கவிதை பொருந்துகிறது. ஆனால் இக்கவிதையை இயற்றிய டெம்ஸ்ரர் (R. T. Dempster) இதற்குக் கொடுத்த தலைப்பு: 'ஆபிரிக்காவின் கோரிக்கை.' எனவே, ஆபிரிக்கன் தன்னை அடிமைகொண்ட வெள்ளைக்காரனைப் பார்த்துச் சொல்வதாக இது அமைகிறது. ஆனால்

மேற் குறிப்பிட்ட எல்லாத் தளங்களுக்கும் இது பொருந்துவதால், இதன் வியாபகம் மிகப் பரந்ததாக அமைந்து இன்பம் தருகிறது. நல்ல கவிதையின் பயன்பாடு இதுதான். ❋

## நீயும் நானும்!

நான் நீயல்ல
ஆனால்
நான் நானாக இருப்பதற்கு
நீ
ஒரு சந்தர்ப்பம் தருகிறாயில்லை!

நீ
என் விஷயங்களில்
தலையிடுகிறாய்
ஏதோ அவை
உன் விஷயங்கள் போலவும்
நீ நான் போலவும்!

''நான் நீயாக இருந்தால்......''
உனக்குத் தெரியும்
நான் நீயல்ல
என்றாலும்
நீ
என்னை நானாக இருக்க
விடுகிறாயில்லை!

நான் நீயாகலாம்
உன்னைப்போல்
பேசலாம், நடக்கலாம்
சிந்திக்கலாம்
என எண்ணும்
உனக்குப்புத்தியில்லை
உன்பக்கம் நியாயமில்லை!

கடவுள் என்னை நானாகவும்
உன்னை நீயாகவும்
படைத்தார்.
கடவுள் பேரால் கேட்கிறேன்:
என்னை
நானாக இருக்கவிடு!

மூலம் : R T டெம்ஸ்ரர் (லைபீரியா)
தமிழில்: சோ. ப.

# அலைகள்

□ கடலோடி □

சரிநிகர் என்றொரு பத்திரிகை கொழும்பிலிருந்து வெளி வருகிறது. இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம் (மோர்ஜ்) இதனை வெளியிடுவதாகவும், (கனடாவில் படித்துக்கொண்டிருக்கும்!?) உ. சேரன் பிரதம ஆசிரியர் எனவும் அதில் அச்சிடப்பட்டுள்ளபோதும், உண்மையில் - நடைமுறையில் - 'அரசியல் ஓடுகாலிகளைக்' கொண்ட 'குழு' வொன்றே அதனை நடாத்தி வருகிறது; அக்குழுவிலும் என்.எல்.எவ்.ரி இயக்க உறுப்பினரின் கை மேலோங்கி இருப்பதாகத் தெரிகிறது. இவர்கள் 'மோர்ஜ்' நிறுவனத்தைத் தங்களின் 'வக்கரிப்புக்களை' வெளியிடுவதற்குப் பாவிக்கின்றார்கள். (தாங்கள் மற்ற இயக்கங்களைப் போலல்லாது "மக்களில் நம்பிக்கை கொண்டவர்கள்" என்று சொல்லிக்கொண்டு இவர்கள் முன்பு செய்தது, யாழ். 'ஹற்றன் நஷனல் வங்கி'யைக் கொள்ளையிட்டு, இப்பகுதியில் 'ஆகப் பெரிய வங்கிக் கொள்ளை' என்ற சாதனையை நிலைநாட்டியதுதான்! இவ்வியக்க மத்திய குழு உறுப்பினரில் ஒருவர்தான், மனித உரிமைகளுக்கான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் குழு என்ற பொய்யான அமைப்பின் பெயரில், கொழும்பிலிருந்து வெளியிடப்படும் அறிக்கைகளின் சூத்திரதாரியான கலாநிதி ஸ்ரீதரன்).

தமிழீழ நிலைமைகளைத் திரித்தும், தேச விடுதலைப் போராட்டத்தைப் பின்னடையச்செய்யும் விதமாகவும், தமிழீழ மக்கள் சோர்வடையும்படியாகவும் விடயங்களைத் திட்டமிட்டுச் 'சரிநிகரில்' வெளியிட்டு வருகிறார்கள். "தமிழீழம் தேவை" என, இந்த "அரசியல் ஓடுகாலிகள்" இப்போது சொல்வதில்லை! 'சூரியனின் கீழுள்ள எல்லாவற்றையுமே' அதிமேதாவித்தனத்துடன் விமர்சிக்கும் இவர்கள், தமிழ்த் தேசிய இனப்

பிரச்சினைக்கு உங்கள் தீர்வு என்ன என்ற கேள்வியை யாரும் எழுப்புகிறபோது, ''நாங்கள் பத்திரிகையாளர்; எங்களிடம் தீர்வு இல்லை'' என்று வெட்கமில்லாமல் கூறியபடியும் நழுவுகிறார்கள்!

தேச விடுதலைப் போராட்டத்தையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும் ஆதரிக்கிறார்கள் என்பதற்காக, கலைஞர்கள் - எழுத்தாளர்கள் பலரின் பெயர்களைக் குறிப்பிட்டுக் கிண்டல் செய்து, முன்பும் தாக்கியிருக்கிறார்கள்; மறுவளமாக, விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் எழுத்தாளர்களின் விபரங்களை - தங்கள் பத்திரிகைமூலம் - சிறீலங்கா அரசின் உளவு நிறுவனங்களுக்கு வழங்குகிறார்கள். ''சனநாயகம்'' பற்றி ஓயாது வாய் கிழியக் கத்தும் இவர்கள்தான், முன்னர் குறிப்பிட்ட எழுத்தாளர்களின் சனநாயக உரிமையை மதிக்காது கிண்டல் பண்ணுகிறார்கள்!! இந்த ''உண்மைச் சனநாயகவாதிகள்'' 'சரிநிகரில்' வெளியிட்ட கவிதையொன்றையும் பாருங்கள்; இது அக்குறணை இளைய அப்துல்லாஹ் என்பவர் எழுதிய கவிதை.

'' ...
கறுப்புத் துப்பாக்கியில் குண்டைப் பொருத்து
குறிவை! உன்னை உரித்து
வெள்ளையாடையை உடுத்தியவர்கள்
அனைவரும் துடித்துத் துடித்து
சாகும்வரை சுடு!

மன்னிப்புக் கேட்பவர்களையும்
சுடு!
**அது உயிருக்கான** பாசாங்கு!''

- சரிநிகர்: *16 - 31* **ஆவணி,** *1993.*
*( அழுத்தம் என்னுடையது — கடலோடி.)*

அண்மையில் வெளிவந்த 'சரிநிகர்' இதழொன்றில் கவிதை இதழும், அதன் ஆசிரியரும் தாக்கப்பட்டுள்ளனர்; காரணம், முன்னர் குறிப்பிட்டதுபோல் அரசியல் நிலைப்பாடுதான்! இத் தாக்குதலைச் செய்திருப்பவர், 'சூர்யா' என்ற பெயரில் எழுதுகிற அ. ரவி என்ற 'என். எல். எவ். ரி.' இயக்க உறுப்பினர். அந்தக் குறிப்பில் பொய்யான - திரிக்கப்பட்ட - விடயங்கள் பல உள்ளன. அவற்றையெல்லாம் விளக்கி 'கவிதை'யின் பக்கங்களை வீணடிக்க, நான் விரும்பவில்லை. ''அலை இதழ் ஆரம்பத்தில் ஆறு ஆசிரியர்களைக் கொண்டிருந்தது'' என்றும்; ''கே. டானியல் எழுதிய 'வீராங்கனைகளில் ஒருத்தி' எனும் வியட்னாம் பெண்ணைப் பற்றிய சிறுகதை'' என்றும் அபத்தமாக எழுதுகிற அ. ரவியினது குறிப்

பின் உண்மைத்தன்மை பற்றிய முழுமையான பரிசீலனையை, புத்திசாலித்தனங்கொண்ட வாசகரிடம் விட்டு விடுகிறேன்; இங்கு மூன்று விடயங்களைமட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

1. 'கவிதையின்' முதல் இதழில் நான் குறிப்பிட்ட இளங் கவிஞர்கள் படிக்கவேண்டிய கவிஞர்களின் பட்டியலில் 'சேரன், ஜெயபாலன், சிவசேகரம் ஆகியோர் விடுபட்ட மையைக்' குறிப்பிட்டுத் தாக்கியுள்ளார். ஏதோ இம்மூவரை யும் சேர்த்திருந்தால் அப்பட்டியல் பூர்த்தியடைந்துவிடும் என்ற தோரணையில்! ஒரு சிறிய 'பத்தி'யில் கவிஞர்கள் சிலரை இளங்கவிஞர்களுக்கு அறிமுகப்படுத்தியிருந்தேன்; அவ்வளவுதான். அது சரி அ. ரவி அவர்களே! நீலாவணன், மு. பொன்னம்பலம், சோ. பத்மநாதன், தருமு சிவராமு, பசுவய்யா, தி. சோ. வேணுகோபாலன், ஞானக்கூத்தன், ஆத்மாநாம், மனுஷ்ய புத்திரன், சோலைக்கிளி, சுகுமாரன் போன்ற வேறு நல்ல கவிஞர்களையும்தான் நான் குறிப்பிட வில்லை. இதுகுறித்து உங்களுக்கு ஏன் கோபம் வரவில்லை?

சேரனின் கவிதைகள் எல்லாமே அற்புதமானவையா? அவரது 'கானல் வரி', 'எலும்புக்கூடுகளின் ஊர்வலம்' தொகுதி களின் தரம்......?! ஏழெட்டு ஆண்டுகளின் முன்னர், ''பூர்ஷுவாக் கவிஞன்'' எனச் சேரனை விமர்சித்த உங்கள் இயக்கத்தவர்கள், அவரது கவிதைகளைத் தெருவில் குவித்து எரிக்கப்போவதாகக் கூறித்திரிந்ததையும் இங்கு பலர் இன்னும் மறக்கவில்லை.

ஜெயபாலனின் 'ஒரு அகதியின் பாடல்' கவிதை நூல் பற்றிய விமர்சனத்தில், ''...... ஆனால் முக்கியமான விடயம் கவிதையைக் காணவில்லை'' என்று எழுதியதும் தாங்கள்தானே! மறந்து விட்டீர்களா?; 'சரிநிகரை' (ஜூன் 1993) ஒரு தடவை புரட்டிப் பாருங்கள்!

2. 'கவிதை' இதழ் இளங்கவிஞர்களுக்கானது என்பது, அந் தத் தாக்குதற் குறிப்பில் திட்டமிட்டுத் தவிர்க்கப்பட்டுள் ளது; இது உள்நோக்கமுடையது.

3. ''கவிதை இதழைப்பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது?''.

''யாழ்ப்பாணம் இப்போது கிணறு; அங்கு கவிஞர்கள் தவளைகளாகிவிட்டனர்'' என்று எழுதியுள்ளார். உண்மை யில், யாழ். பல்கலைக்கழகத்தில் நான்கு வருடங்களாகத் தமி ழைச் சிறப்புப் பாடமாகக் கற்றுத் தேறிய அவரது மூளை, ஒரு 'விசித்திர மூளை'யாகத்தான் இருக்கவேண்டும்!

# கூடல்

ஆரவாரங்கள் எதுவுமின்றி எளிமையுடனும் அதே சமயம் முழுமையுடனும் கவிதை பிறந்துள்ளது காலத்தின் தேவை உணரப்பட்டுக் கவித்துவ உணர்வுகள் உந்தப் பட்டமையின் விளைவுதான் 'கவிதை'.

'பசுமைப் பசி'யில் கவிஞரின் கற்பனை வளத்தைக் காண முடிகிறது இயற்கை வளத்தைக் கருவுக்குத் தீனியாக்கி கற்பனை வளத்தால் தம் கவிதைக்கு மெருகூட்டியுள்ளார் கவிஞர். 'என்னுடைய உறவுகள்' இல் இயற்கையின் எளிமையை - கபடமற்ற தூய்மையை இரசித்த கவிஞரின் உணர்வுகள் கவிதையாகப் பரிணமித்துள்ளன. அவரது கவிதையுங்கூட மிக எளிமையாகவும், உவமான உவமேய ''கலப்படங்கள்'' இன்றியும், மறைமுகமான ''அந்தரங்க'' கருத்துக்கள் எதுவுமின்றியும் இலகுநடையில் அமைந்துள்ளமை குறிப்பிடற்பாலது.

சமூகச் சீர்கேட்டைக் கவி நயத்தால், கவித்துவ மரபுக்குக் களங்கம் விளையாது சிறப்புற வெளிப்படுத்தியுள்ளார் மஹாகவி.

கவிதையின் முக்கியத்துவம், அதன் தோற்றுவாய் என்பவற்றை, குறுகிய கட்டுரையாயினும் மிகத் தெளிவான முறையில், வரலாற்றுரீதியாக விளக்கியுள்ளார் சோ. பத்மநாதன்.

பொருளாதார, அரசியல் நெருக்கடிகள் நிறைந்த இக் காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இம்முயற்சிக்கு, ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க வேண்டியது அனைவரதும் கடமையாகும்.

-வை. சுந்தரேசன்
ஆங்கிலத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

முதன்மைக் கவிஞன் 'மஹாகவி'யின் தேரும் திங்களும் கவிதையைச் சிறப்புக் கவிதையாகப் பிரசுரித்திருந்தீர்கள்; களிப்படைந்தேன். நல்ல கவிதைகளைப் படிக்க வாய்ப்பளித்தமைக்கு நன்றிகள் பல.

மேலும், 'கவிதை' இதழில் புதுக்கவிதைகளையே பிரசுரித்துள்ளீர்கள். மரபுக் கவிதைகள் ஏன் பிரசுரிக்கவில்லை? அனுப்பினால் தரமாயின் பிரசுரிப்பீர்காளா?

**ஆ. தீபவர்ணன்**
**கரவெட்டி.**

* அனுப்புங்கள், 'தேரும் திங்களும் கூட மரபுக் கவிதைதான்!

**- ஆசிரியர்**

நாடுங்கள்...!

சகலவித மோட்டார் சைக்கிள்
உதிரிப்பாகங்களுக்கும்......

**கஜன் மோட்டர்ஸ்**

54, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

---

வாசித்தீர்களா?

**துளிர்**

தமிழ்நாட்டின் புகழ்பெற்ற
சிறுவர்களுக்கான அறிவியல் இதழ்!

தரமான இதழ்களையும்
புத்தகங்களையும் பெற .....

**வசந்தம் புத்தக நிலையம்**

(புதிய பஸ் நிலையத்தின் முன்)
405, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

எல்லாவகை டீசல் பம்புகளும்
இன்ஜெக்ரர்களும்
திருத்துவதற்கும், சேவிஸ் செய்வதற்கும்...
உதிரிப்பாகங்களிற்கும்...

## இராசா டீசல் என்ஜினியர்ஸ்

180, பருத்தித்துறை வீதி,
குருநாதர் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

---

இல்லத்தரசிகளின்
இதயம் கவர்ந்த ஆலை!

அரிசி - மிளகாய் - தானிய வகைகள்
அனைத்தும்

பட்டுப்போல் அரைத்துக் கொடுப்பவர்கள்

## R. S. K. அரைக்கும் ஆலை

பலாலி வீதி

கோண்டாவில்




**அரசியல் பரிமாணமும்**
**கலைநயமும் இணைந்த**
**34 உருவகங்களின் தொகுதி**
**விலை: ரூபா 50/-**



**ஆட்டத்தில் ஏதும் சந்தேகமா?**
**தெளிவுபடுத்தி**
**உங்களுக்கு அறிவூட்டுகிறது!**

**100**
**கேள்விகளுக்கு விடைகள்!**

Rs. 20/-

ஜெ. மே. மாட்டின் எழுதிய
**உதைபந்தாட்டப் பிரச்சினைகள்**
**விலை: ரூபா 60/-**

இரண்டு நூல்களும் 'தமிழ்த்தாய் வெளியீடு'கள்.
எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

*மாறன் பதிப்பகம், 664, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.*